



கரூர் மாவட்ட அளவில் நடைபெற்ற கலைத் திருவிழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மின்சாரம் மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பரிசு கோப்பை சான்றிதழ் வழங்கினார். அருகில் கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், எம்.எல்.ஏக்கள் ஆர். இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் ப.சரவணன் உள்ளிட்டோர் அருகில் உள்ளனர்.

### கரூர் மாவட்ட அளவிலான

# கலைத் திருவிழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு!

## அமைச்சர் செந்தில் பாலாஜி வழங்கினார்!

கரூர், நவ.27-

கரூர் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற1009 மாணவ-மாணவிகளுக்கு அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பரிசு கோப்பை சான்றிதழ் வழங்கினார்.

மின்சாரம். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் அரசு மருத்துவ கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளி கல்வித்துறையின் சார்பாக மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டியில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர் இளங்கோ (அரவக்குறிச்சி). க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர் வெ.கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அரசு பள்ளி மாணவ மாணவிகளிடம் கலைத்திறனை மேம்படுத்தும் நோக்கில் கடந்த ஆண்டு "சங்கமிப்போம் சமத்துவம் படைப்போம்" என்ற தலைப்பிலும், இந்த ஆண்டு "சூழல் பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு" என்ற மையக் கருத்தில் நடத்தப்பட்ட கலைத் திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற 1009 மாணவ மாணவியர்களுக்கு அமைச்சர் வி. செந்தில் பாலாஜி சொந்த செலவில் சான்றிதழ் மற்றும் பரிசு கோப்பைகளை வழங்கினார்.

சுமார் இரண்டரை மணி நேரம் மேடையில் நின்று அனைத்து மாணவ மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தனது கரங்களால் சான்றிதழ் மற்றும் கோப்பைகள் வழங்கினார்.

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆண்டுதோறும் கலைத்திருவிழா என்ற நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு, 1 முதல் 5 வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கும் இப்போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை அரசு ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

கலைத்திருவிழாவில் பேச்சுப்போட்டி, பாட்டு போட்டி, ஓவிய போட்டி, இசைக்கருவிகள் வாசித்தல், சிற்பம் செதுக்குதல் என தனித்திறனை ஊக்கப்படுத்தும் வகையில் 84 போட்டிகள் நடத்தப்பட்டது. வட்டார அளவில் மற்றும் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகள் மாநில அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டது.

கடந்த 2022 23 ஆம் ஆண்டு கல்வி ஆண்டில் மாநில அளவில் முதலிடம் பெற்ற 32 மாணவ மாணவியர்கள், இரண்டாமிடம் பெற்ற 28 மாணவ மாணவ மாணவியர்கள் மற்றும் மூன்றாமிடம் பெற்ற11 மாணவ மாணவிகளை பாராட்டும் வகையில், மாணவர்களுக்கு கலையரசன் என்றும் மாணவியருக்கு கலையரசி என்ற பட்டமும் தமிழக முதலமைச்சரால் வழங்கப்பட்டது.

மாநில அளவில் வெற்றி பெற்றவர்களை தர வரிசையில் அரசு செலவில் துபாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அடுத்த ஆண்டு அரசு உதவி பெறும் பள்ளியிலும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் நடத்தப்பட்ட கலைத் திருவிழாவில் 63,405 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இதில், 30,560 மாணவ, மாணவிகள் வெற்றி பெற்றனர். வட்டாரப் பள்ளிகள் அளவில் 5,329 மாணவ மாணவிகள் பங்கேற்றத்தில் 3,266 மாணவ, மாணவிகள் வெற்றி பெற்றனர். மாவட்ட அளவில் 1,547 பங்கேற்றதில் 966 மாணவ, மாணவிகள் வெற்றி பெற்றனர். இதில் 43 மாற்றுத்திறனாளிகள் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

விழாவில் சிறந்த அமைச்சர் வி. செந்தில்பாலாஜி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிற மாநிலங்கள் வியந்து பாராட்டும் வகையில் சிறப்பான ஆட்சியை வழங்கி வருகிறார்கள். குறிப்பாக பெண்கள், மாணவ மாணவிகள், தொழிலாளர்கள் விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களுக்கான நல்லாட்சியை வழங்குவதோடு, பல்வேறு மக்கள் நலத்திட்டங்களையும் அறிவித்து செயல்படுத்திவருகிறார்கள்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் பள்ளிக் கல்வித்துறையின் மூலம் அரசுப் பள்ளியில் பயிலும் மாணாக்கர்களுக்கு பல்வேறு திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதே போல் நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்குத் தான் அதிகளவில் ரூ.44 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன் நோக்கம் மாணவர்களை சர்வதேச அளவில் தலை சிறந்தவர்களாக உருவாக்குவதே ஆகும்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆரோக்கியமான வருங்கால சந்ததியினரை உருவாக்கும் நோக்கத்தோடு அரசு பள்ளியில் 1ம் வகுப்பு

முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். கரூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் 746 பள்ளியில் பயிலும் 29.353 மாணாக்கர்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டம் பிற மாநிலங்களுக்கும் முன்னோடி திட்டமாக திகழ்கிறது.

தமிழ் வழியில் பயின்ற மாணவர்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளக்குகிறார்கள். மேலும் மாணவர்கள் படிப்பதோடு மட்டும் மல்லாமல், விளையாட்டு போட்டிகளிலும் சிறந்த வீரர்களாகவும் உருவாக வேண்டும். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத் துறையில் அதிக கவனம் செலுத்தி இன்று தமிழகத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவில் உயர்த்தியுள்ளார்கள். கரூர்

2024-2025 ஆம் கல்வியாண்டுகளில் 8 பள்ளிகளில் 59 வகுப்பறைகள் புதிதாக ரூ.12 கோடியே 53 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. கட்டிட பராமரிப்பு பணிகளுக்காக ரூ.2 கோடியே 39 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 20232024 ஆம் கல்வியாண்டில் 6 பள்ளிகளில் 40 வகுப்பறைகள் ரூ.10 கோடியே 69 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு மாணவர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளில் மாவட்ட அளவில் 706 மாணாக்கர்கள் தகுதி பெற்று மாநில அளவில் நடைபெற்ற போட்டியில் கலந்து கொண்டனர். அதில் ஜீடோ விளையாட்டு போட்டியில் 3 தங்கம். 2 வெள்ளி மற்றும் 9 வெண்கலம் பதக்கங்களும், டென்னீஸ் விளையாட்டில் 1 வெள்ளிஎன மொத்தம் 15 மாணாக்கர்கள் பதக்கங்களை வென்றுள்ளனர். இந்த எண்ணிக்கை வருங்காலத்தில் அதிகரிக்கும். இந்த வீரர்கள் அனைவரும் சர்வதேச போட்டிகளிலும் பங்கேற்று எதிர்காலத்தில் சிறந்த வீரர்களாக உருவாக வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கமாகும். இந்தியாவின் தலைநகரம் டெல்லியாக இருந்தாலும் விளையாட்டுக்கான தலைநகரம் தமிழ்நாடாக இருக்க வேண்டும் எண்ணத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத் துறையின் மூலம் செயல்பட்டு வருகிறார்கள்.

நானும் அரசுப் பள்ளி மாணவன் என்பதில் பெருமைகொள்கிறேன் உங்களின் ஒருவராகவே நான் இருக்கிறேன். பரிசு பெற்ற உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் செந்தில் பாலாஜி பேசினார்.

இதனை தொடர்ந்து அமைச்சர் செந்தில்பாலாஜி, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப் படக் கூடத்தை (போட்டோ கேலரி) திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர்.ம.கண்ணன். மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்செல்வன். துணை மேயர் .ப.சரவணன், மாநகராட்சி ஆணையாளர் கே.எம்.சுதா. துணை மேயர் ப.சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செந்தில்குமார். பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் (கட்டிடங்கள்) சுஜாதா. மண்டல குழுத் தலைவர்கள்எஸ்.பி.கனராஜ், க.அன்பரசன். ஆர்.எஸ்.ராஜா எஸ்.சக்திவேல், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுகானந்தம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணன், மாமன்ற வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், காட்டுப்பட்டி ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்மாற்றியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 25.11.2024 அன்று துவக்கி வைத்தார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் திருமதி.சுந்தரி அழகப்பன், செயற்பொறியாளர் (மின்சார வாரியம்) திருமதி.எம்.ஆனந்தாய், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# தருமபுரி, கிழக்கு மாவட்டத்தில் நல உதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ. சுப்பிரமணி அறிக்கை!



தர்மபுரி, நவ.27-

தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தடங்கம் சுப்பிரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: தமிழக துணை முதல் அமைச்சரும், இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா இன்று (புதன்கிழமை) தர்மபுரி கிழக்கு மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அந்தந்த பகுதிகளில் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கட்சியின் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு அன்னதானம், மாணவ மாணவிகளுக்கு இலவச நோட்டுபுத்தகம், எழுது பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டுகிறேன். மேலும் இந்நாளில் ஆதரவற்றோர், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அன்னதானம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளும் வழங்க வேண்டு கிறேன்.

இந்த நிகழ்ச்சிகளில் அந்தந்த பகுதியைச் சேர்ந்த கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி, ஊராட்சி நிர்வாகிகள், இளைஞரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கட்சியின் முன்னணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், நவ.27-

பெரம்பலூர் மாவட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் அறிக்கை தெரிவித்துள்ளார்.

ஒற்றை செங்கலால் ஒன்றிய அரசின் முகமூடியை கிழித்து ஒன்றிய அரசை அதிர வைத்த திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை இன்று (27. 11.2024) பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து கிளை, வார்டுகள் தோறும் கழக கொடியேற்றி, இனிப்புகள் வழங்கியும், ஏழை எளிய வர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகள், முதி யோர்களுக்கு புத்தாடைகள், உணவு வழங்கியும் மரக்கன்றுகள் நட்டும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கியும், மருத்துவ முகாம், ரத்ததான முகாம், இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தி உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும், பிறந்த நாள் நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பா ளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு துணை முதல்வர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும், விழா ஏற்பாடுகளை மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய ,நகர, பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,கிளை, வார்டு கழக நிர்வாகிகள் செய்திட வேண்டும்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# திருவாரூர் தி.மு.க. இலக்கிய அணியின் நிர்வாகிகள் அறிமுக ஆலோசனைக் கூட்டம்!

## பூண்டி கலைவாணன் தலைமையில் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் பங்கேற்பு!

திருவாரூர், நவ.27-

திருவாரூர் மாவட்டத்தில்உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட இலக்கிய அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் வரை. எஸ்.பிரகாஷ் முன்னிலை ஏற்றார்.

தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களோடும்,துணை முதலமைச்சர் இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களோடும், திருவாரூர் மாவட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் அவர்களின் ஒப்புதலோடும் ,தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டிருந்த ஒன்றிய , நகர, பேரூர் கழகங்களின் இலக்கிய அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களின் அறிமுக ஆலோசனை கூட்டம் திருவாரூர் ஹோட்டல் காசீஸ் - இன்னில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களை தலைமை ஏற்றார். நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் அவர்கள் முன்னிலை ஏற்றார். மாவட்ட அமைப்பாளர் என்கண் மணி வரவேற்புரை வாசிக்க, துணை தலைவர் தியாகராஜன், துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன்,சோம. இளங்கோவன்,சோம சுந்தரம், செல்லத்துரை ,தங்க . குணசேகரன் உள்ளிடோர் கருத்துரையாற்றினார். பாலமுத்து நன்றி கூறினார்.

இலக்கிய அணி அமைப்பளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களை நியமித்த கழக தலைவர் தமிழ்நாடு முதலவர் தளபதி, இளைஞர்அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் உள்ளிட்டோருக்கு நன்றி, கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது, சட்டமன்ற தேர்தலுக்கு இலக்கிய அணி தீவிர களப்பணியாற்றுவது, கழக அரசின் சாதனைகளை துண்டு பிரசுரங்கள், சமூக வலைத்தளங்கள் வழியே மக்களிடம் கொண்டுசெல்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.



நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் இல்லத்தில் பிறந்த முரசொலி மாறன் அவர்களுக்கு வைக்கப்பட்டுள்ள முரசொலிமாறன் சிலைக்கு அவரது 21 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கீழையூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சோ.பா. மலர்வண்ணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார், மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் பி.தியாகராஜன், குவளை கணேசன், ஜோதிபாசு, ஒன்றிய குழு உறுப்பினர் சுதாஅருணகிரி, கிளைச் செயலாளர் சண்முகம், கலைஞர் இல்ல காப்பாளர் பந்தல் தியாகராஜன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கார்த்தி, துணை வேட்பாளர் குமார் மற்றும் பலர் உள்ளனர்.



தர்மபுரி கிழக்கு மாவட்டம்,தருமபுரி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் டி.எல்.காவேரி ஏற்பாட்டில் நடைபெற்ற தருமபுரி மேற்கு ஒன்றிய செயற்குழு கூட்டத்தில் தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி, துணை முதல்வர் டிசம்பர் 5 ,6 ஆகிய தேதிகளில் தர்மபுரி மாவட்டம் வருகை, அதற்காக சிறப்பான வரவேற்பு அளிப்பது உள்ளிட்ட கழகப்பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினார்.கூட்டத்தில் ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ்,மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ரேணுகாதேவி,மருத்துவர் அணி மாவட்ட தலைவர் டாக்டர்.மாதப்பன்,ஒன்றியக் குழு உறுப்பினர் சாந்தி,ஒன்றிய கழக நிர்வாகிகள் தண்டபாணி,சந்தோஷ்,ஐ.டி விங் எம்.பி.கௌதம்,உதயசூரியன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.